# கண்டறியாத பொங்கலாம் பொங்கல்




## சிறி
### *ஒரு பேப்பருக்காக*

பொங்கலோ பொங்கல் என்று ஊரில் மகிழ்ச்சியாய் உற்சாகத்துடன் சொன்ன வார்த்தை இன்று புலம் பெயர் தேசத்திலை பொங்கலாம் கண்டறியாத பொங்கல் என்று சலிப்புடன் சொல்லுகின்ற நிலைமைக்கு ஆகிவிட்டது.

அதுவும் ஒரு நலைந்து வருசமாத்தான் இந்த நிலைமை. அதுக்கு முந்தியெல்லாம் இலங்கையிலை பொங்கல் என்ன நாளோ அதே நாளிலை புலம்பெயர் நாடுகளிலையும் சந்தோசமாய் பொங்கி சாப்பிட்டிட்டு மிச்சத்தை பிறிச்சுக்கை வைச்சிட்டு பேசாமல் அவரவர் தங்கடை வேலையை பாத்துக்கொண்டிருந்தனாங்கள்.

ஆனால் இப்ப ஒரு நாலைஞ்சு வருசமாய் பொங்கல் வருகுதாம் எண்ட உடைனையே ஒரு பிரச்சனையும் தொடங்கி விடும். அதாவது பொங்கல் 14ம் திகதியா 15ம் திகதியா இல்லாட்டி 16ம் திகதியா எண்டு.

இந்த விவாதம் உலகத்தின் சூரியன் முதல் உதிக்கும் நாடு ஒஸ்ரேலியாவிலை தொடங்கி ஆசியாவை கடந்து மத்தியதரை நாடுகள் எண்டு வந்து ஜரோப்பா ஊடாக சூரியன் மறையிற நாடு கனடாவில் விவாதம் கரையை கடக்கும்.

என்னது வானிலை ஆராச்சியிலை புயல் போகிற பாதையை சொன்ன மாதிரி இருக்கெண்டு யோசிக்காதையுங்கோ. இதுவும் ஒரு புயல் மாதிரித்தான் இந்த விவாதம் நடக்கும்.

ஊரிலை இண்டைக்குத்தானே பொங்கலெண்டவை எண்டு ஜரோப்பாவிலை இருக்கிற கன பேர் றைஸ்குக்கருக்குள்ளையோ அலுமினியப் பானைக்குள்ளையோ பாலையும் தண்ணியையும் ஊத்திக் கொதிக்கவைச்சிட்டு அரிசியை போடலாமா விடலாமா எண்டு சந்தேகத்திலை ஒஸ்ரேலியாவிலை இருக்கிற சித்திக்கு போனடிச்சு கேட்டால் அவா பொங்கல் நேற்றல்லோ எண்டுவா.

சரி கனடாக்கு போனடிச்சால் அது நாளைக்கல்லோ எண்டுவினம். சரி இரண்டு பேரும் வேண்டாம் எண்டிட்டு இஞ்சை யாராவது ஒரு அய்யருக்கு போனடிச்சு கேப்பினம்.

அவர் பஞ்சாங்கத்தை புரட்டிப் போட்டு இண்டைக்கு பின்னேரம் 4.46 க்குத்தான் மகரத்துக்குள்ளை சூரியன் போறான். அதாலை 4.47க்கு அரிசியை போடுங்கோ எண்டுவார்.

ஆனால் பொங்க வெளிக்கிட்டவருக்கோ நாலுமணிக்கு அடுத்த வேலைக்கு போக வேணும். 4.47க்கு அரிசியை போடுறதெண்டால் வேலைக்கு போற வழியிலை கொஞ்ச அரிசியை பொக்கற்றுக்குள்ளை அள்ளிக் கொண்டு போய் றெயினுக்குள்ளையொ பஸ்சுக்குள்ளையோ வைச்சு 4.47க்கு வாய்க்குள்ளை அள்ளிப் போட வேண்டியதுதான். அது பொங்கலாய் இருக்காது தனக்குத் தானே வாய்கரிசி போட்ட மாதிரி இருக்கும்.

இதென்ன நல்லநாள் பெரியநாளைபற்றி அபசகுனமாய் எழுதிறனெண்டு கோபிக்காதையுங்கோ.

உழவுத் தொழிலை மூலத்தொழிலாக கொண்ட மூத்த தமிழினத்தின்ரை அடையாளமான ஒரு விழாவும் இப்ப அல்லாடுது. அதுக்கு என்ன காரணம் எண்டால் இந்த சோதிடக்காரார் செய்யிற கூத்துகள் தான்.

**இப்ப ஒரு நாலைஞ்சு வருசமாய் பொங்கல் வருகுதாம் எண்ட உடைனையே ஒரு பிரச்சனையும் தொடக்கிவிடும். அதாவது பொங்கல் 14ம் திகதியா 15ம் திகதியா இல்லாட்டி 16ம் திகதியா எண்டு.**

ஒருத்தர் பொங்கலை இலங்கை இந்திய நேரத்துக்கு கணிப்பார் இன்னொருத்தர் ஜரோப்பிய நேரத்துக்கு இன்னொருத்தர் அமெரிக்க கனடா நேரத்துக்கெண்டு ஆளாளுக்கு கணிச்சு சந்தோசமாய் கொண்டாட வேண்டிய பொங்கலை சங்கடத்தோட கொண்டாட வேண்டியிருக்கு.

போன வருசம் பொங்கலில் மூன்று திகதிகளில் இருந்த குழப்பம் இந்த வருசம் குறைந்து 14 அல்லது 15 இரண்டாக குறைஞ்சிட்டுது. அந்தளவிலை சந்தோசம்.

நானும் வீட்டிலை 14ந் திகதி பொங்குவம் எண்டு வெளிக்கிட்டு அடுப்பிலை அலுமினிய சட்டியை வைக்க என்ரை மனிசி 15ந்திகதி தான் பொங்கல் எண்டு அடம் பிடிக்க சரி இரண்டு பேருக்கும் பிரச்சினை வேண்டாம் எண்டிட்டு 14ந்திகதி பொங்கி அதை அப்பிடியே பிறிச்சிலை வைச்சிட்டு 15ந்திகதி அதை எடுத்து மைக்றோவணிலை சூடாக்கி சாப்பிட்டு பொங்கலை கோலாகலமா கொண்டாடி முடிச்சிட்டம்.

ஆனால் புலம்பெயர் தேசத்திலை தமிழருக்கெல்லாம் ஒளிமயமான எதிர் காலத்தை கணித்துக் காட்டிக் கொண்டும் எங்கையாவது மங்கலாய் தெரிந்தால் அந்த இடத்தில் ஒரு பல்ப்பை பூட்டி வெளிச்சத்தை காட்டி அதற்கு பரிகாரங்கள் செய்யும் சோதிட சர்க்கரவர்த்திகளே...

அவர்களிற்கு அடுத்ததாக உள்ள உள்ளுர் சிற்றரசர்களான பூசாரிகளே...

உங்கள் காலக்கணிப்புகளையும் சோதிட வித்தகங்களையும் உங்களிடம் கலியாணத் திற்கோ அல்லது வீடு குடிபோக வருகின்ற ஒருநபரிடம் காட்டுகள். அது உங்களை நாடி வருபவனின் நம்பிக்கை. உங்களின் உழைப்பு.

ஆனால் ஆயிரம் மைல்களிற்கு அப்பால் வந்து ஆடை மாறியும் தமிழ் வாடையே இல்லாது தனியாய் பனிகொட்டும் நாளில் பரபரப்பாய் வேலை முடிந்து வந்து என் பிள்ளையிடம் இன்று எங்கள் திருநாள் அது இன்றுதான் என்று பொங்கலுக்கு விளக்கம் கொடுத்து எங்கள் அடையாளத்தை அழிந்து போகாமல் இருக்க உதவுங்கள்

மாறாக பானையிலே அரிசி போடப் போகும் போது 'பொங்கல் இண்டைக்கில்லையாம் நாளைக்காம் எண்டு புதுசா வந்திருக்கிற சாத்திரி சொன்னவராம்' என்று தொலைபேசியில் ஒரு குரல் வர வைத்து வெறுப்பேத்தாதீர்கள்.

அடுத்த ஆண்டாவது பொங்கலுக்கு நாள் குறிக்காமல் பேசாமல் இருங்கள் அதுவே நீங்கள் எங்களிற்கு தரும் பொங்கல் பரிசாக அமையும்.

என்னடா இந்த முறை சிறி வந்து சிரிக்காமல் எழுதிப் போட்டு போறார் எண்டு நினைக்காதையுங்கோ பொங்கலே சிரிப்பா போச்சுது அதுதான் என்னாலை சிரிப்பாய் எழுத முடியேல்லை


## இலண்டன் தமிழ் நிலையம் நடாத்தும்
## தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையேயான
# நாவன்மைப் போட்டி

விண்ணப்பதாரர் முறையே பிரிவு, வயது, தலைப்பு, நேரம் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளவும். 13-04-2008 அன்று கீழே குறிப்பிட்ட வயதிற்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

விரும்பிய ஒன்றைத் தெரிவு செய்யவும்

| பிரிவு | வயது | தலைப்பு | நிமிடங்கள் |
|---|---|---|---|
| அ | 3-5 | பாலர் பாடல்* - 13-04-2003 - 14-04-2005 வயதிற்கு இடைப்பட்டவர்கள் | 2 |
| ஆ | 5-7 | சிறு கதை*- 13-04-2001 -14-04-2003 வயதிற்கு இடைப்பட்டவர்கள் | 3 |
| இ | 7-9 | அழியாச் செல்வம்*/பாரதியார்/தாயின் பெருமை 13-04-1999 - 14-04-2001 வயதிற்கு இடைப்பட்டவர்கள் | 4 |
| ஈ | 9-12 | தமிழர் பண்டிகை*/தாயின் பெருமை/எமது கடமை 13-04-1996 - 14-04-1999 வயதிற்கு இடைப்பட்டவர்கள் | 5 |
| உ | 12-15 | பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்* / யாதும் ஊரே யாவரும் கேளீர்/தமிழராய் வாழ்வோம் 13-04-1993 - 14-04-1996 வயதிற்கு இடைப்பட்டவர்கள் | 6 |
| ஊ | 15-18 | குறள் காட்டும் வாழ்வு* / போரும் சமாதானமும் / வாழ்வும் விஞ்ஞானமும் 13-04-1990 -14-04-1993 வயதிற்கு இடைப்பட்டவர்கள் | 7 |

* இப் பேச்சு எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இடம்:
**Wembley High School, East Lane, Wembley HA0 3NT**

**March**
**16**
**10am**

விண்ணப்ப முடிவு திகதி:
**06-03-2008**

நாவன்மைப் போட்டியில் தெரிவாகும் ஒவ்வோர் பிரிவுக்கான முதல் மூன்று திறமைசாலிகளுக்கும் 12-04-2008 அன்று லோகன் மண்டபத்தில் நடைபெறும் கலாச்சார மாலை இயல், இசை, நாடக விழாவில் பரிசில்கள் வழங்கப்படும்.

## விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர்:..........

முகவரி: ..........

படிக்கும் தமிழ்ப் பாடசாலை:..........

தொலைபேசி இலக்கம் :.......... பிறந்த திகதி :..........

பிரிவு :.......... (அ, ஆ, இ, ஈ, உ, ஊ) தேர்ந்த தலைப்பு :..........

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

**Inter - School Elocution Competition**
**253 East Lane, Wembley, Middx HA0 3NN.**
Tel: **020 8908 2646 / 020 8904 5939**